# கட்டுப்பாட்டுக் கணக்குகள்

(01) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு தொடர்பாகப் பின்வரும் கூற்றுக்களில் சரியானது எது?

(1) இது கடன்கொடுத்தோரின் சுருக்கிய தகவல்களை வழங்குகின்றது
(2) இது கொடுக்கல் வாங்கல்களைப் பதிதலில் இரட்டைப் பதிவு முறைமை பின்பற்றப்படுகின்றது
(3) இது கடன்பட்டோரின் துணைப்பேரேட்டில் காணப்படும்
(4) இது பரீட்சை மீதியில் காணப்படும்
(5) இது குறித்த திகதியில் உள்ள கடன்பட்டோர் மீதியினை வழங்குகின்றது. (........)

(02) கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுப்பாட்டுக் கணக்கு தொடர்பாக பின்வரும் கூற்றுக்களில் சரியானது எது?

(1) கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கொன்றின் வரவு மீதியொன்று இருக்க முடியாது
(2) கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு மொத்த மீதியானது அதன் பேரேட்டு மீதியுடன் எப்போதும் சமப்படும்
(3) கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் கடன்பட்டோர் எதிரீடு சாத்தியமில்லை
(4) கொள்வனவு திரும்பல் நாளேட்டின் மொத்தத் தொகையானது கட்டுப்பாட்டுக் கணக்கில் பதியப்படும்
(5) சகல கடன்கொடுத்தோர் தொடர்பிலும் கட்டுப்பாட்டுக் கணக்கொன்று பேணப்பட வேண்டும் (.........)

(03) பின்வரும் கடன் விற்பனைகள் தொடர்பான தகவல்கள் 2020 மார்ச் மாதத்திற்குரியதாகும்.

| கடன்பட்டோர் | பட்டியல் விலை (ரூபா 000) | வியாபாரக் கழிவு | காசு செலுத்த வேண்டிய திகதி | காசு செலுத்திய திகதி |
|---|---|---|---|---|
| மலிங்க | 1,000 | 10 % | மார்ச் - 15 | மார்ச் - 12 |
| தரங்க | 4,000 | 05 % | மார்ச் - 20 | மார்ச் - 25 |

உரிய திகதிக்கு முன்னர் பணம் செலுத்தப்படுமாயின் 5% காசுக் கழிவு வழங்கப்படும் கடன்பட்டோருக்கு வழங்கிய கழிவை பதிவு செய்வதற்குரிய சரியான இரட்டைப் பதிவு எது?

(1) கொடுத்த கழிவுக் கணக்கு வரவு ரூபா 45,000 கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு செலவு ரூபா 45,000
(2) கொடுத்த கழிவுக் கணக்கு வரவு ரூபா 45,000 காசுக் கணக்கு செலவு ரூபா 45,000
(3) கொடுத்த கழிவுக் கணக்கு வரவு ரூபா 50,000 கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு செலவு ரூபா 50,000

(4) கொடுத்த கழிவுக் கணக்கு வரவு ரூபா 235,000 கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு செலவு ரூபா 235,000

(5) கொடுத்த கழிவுக் கணக்கு வரவு ரூபா 235,000 காசுக் கணக்கு செலவு ரூபா 235,000

(.........)

**(04) விற்பனை நாளேடு தொடர்பான பிழையான தகவல்களை உள்ளடக்கிய தொகுதி**

**A** – விற்பனை விபரங்கள் யாவும் எழுதப்படும்

**B** – மீள் விற்பனைக்காக வாங்கப்பட்ட பொருட்களின் விற்பனைகள் பதியப்படும்

**C** – மீள் விற்பனைக்ககாக வாங்கப்பட்ட பொருட்களின் கடன் விற்பனைகள் பதியப்படும்

**D** – நாளேட்டில் உள்ள விற்பனை செய்யப்பட்ட பெயருக்குரிய தொகைகள் அவர்களது தனிப்பட்ட வர் கணக்கில் செலவில் எழுதப்படும்.

(1) A,B,D மாத்திரம் (2) A,B,C மாத்திரம் (3) A,C,D மாத்திரம்

(4) B,C,D மாத்திரம் (5) C மாத்திரம் (.........)

**(05) கொள்வனவு நாளேடு பற்றிய சரியான கூற்றுக்களைக் கொண்ட தொகுதி**

**A** – கடனுக்கு கொள்வனவு செய்த சகல விபரங்களும் பதியப்படும்

**B** – கடனுக்கு கொள்வனவு செய்த ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் பதியப்படும்

**C** – மீள் விற்பதற்கான சரக்குகளின் கடன் கொள்வனவுகள் பதியப்படும்

**D** – வியாபாரக் கழிவு தொடர்பான விபரங்கள் எழுதப்படும்

**E** – நாளேட்டின் கூட்டுத் தொகை பொதுப் பேரேட்டிற்கு மாற்றப்படும்

(1) A,B,C மாத்திரம் (2) B,C,D மாத்திரம் (3) C,D மாத்திரம்

(4) B,C,E மாத்திரம் (5) C,D,E மாத்திரம் (.........)

**(06) கட்டுப்பாட்டுக் கணக்கு என்பது தொடர்பில் சரியான கூற்று / கூற்றுக்களை தெரிவு செய்க**

**A** – மொத்தமாக பதிவு செய்யும் கணக்கு

**B** – நிறுவனத்தின் செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கான கணக்கு

**C** – ஒரே விதமான கொடுக்கல் வாங்கல்கள் பல அமைகின்ற போது அவற்றை மொத்தமாக பதிந்து வைப்பதற்கான கணக்கு

(1) A மாத்திரம் (2) B மாத்திரம் (3) Cமாத்திரம் (4) A,C மாத்திரம் (5) B,C மாத்திரம்

(.........)

**(07) இரட்டைப் பதிவை பூர்த்தி செய்வதற்கான மறு வடிவத்தினை எவ்வாறு அழைப்பார்?**

(1) முதன்மை ஏடுகள் (2) மூல ஆவணங்கள் (3) நாளேடுகள்

(4) பேரேட்டுக் கணக்குகள் (5) பேரேடுகள் (.........)